[1992 மார்ச் 26]

2 கிலோமீட்டர் ஆற்றோடையில் மணலில்தான் இதுவரையிலும் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய நலனுக்காக, குறிப்பாக, பிரசவத்திற்காக செல்லும் தாய்மார்களுடைய நலனுக்காக நம்முடைய தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மீண்டும் சாலை ஏற்படுத்த பரிசீலனை செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்கட்டு -பைத்தூர், கல்லுக்கட்டு- கீரிப்பட்டி வரை செல்லும் சாலைகளானது, சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதி பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஏற்காடு மலை, கல்ராயன் மலை மற்றும் அறநூற்கு மலைப் பகுதிகளில் அமையாத காரணத்தால், இப்பகுதி பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது. ஆனால் ஆத்தூர் ஒன்றியத்தின் மூலமாக வேறு திட்டத்தின் மூலமாக இதைப் பரிசீலிக்கலாம்.

முற்பகல் 10,45

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தாய் உள்ளம் கொண்ட தங்கத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஆத்தூரில் நீண்டநாள் மக்கள் தேவையான கால்நடை டிஸ்பென்சரியை அப்-கிரேட் செய்து கொடுத்துள்ள நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான பாதங்களில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல 13 லட்சம் ரூபாய் செலவில் பெண்களுக்காக விடுதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகவும் அவர்களுடைய பொன்னான பாதங்களில் நன்றி கூறி, இந்தச் சாலை உள்ளாட்சித்துறை மூலமாவது அல்லது பொதுப்பணித் துறை மூலமாவது அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை, பொதுப்பணித்துறை, அமைச்சர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தால் நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 375, திரு. வெ. நடேசன் பால்ராஜ்—இருக்கையில் இல்லை.

வினா எண். 376, டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு வைரகத் தொழில் துறை அமைச்சர்.

]1992 மார்ச் 26

376—

பிளாஸ்டிக் தொழிற்சாலை.

*4319 —டாக்டர் எம். கருப்புசாமி—
மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

குன்னூர் தொகுதியில் உலிக்கல் என்ற இடத்தில் பிளாஸ்டிக் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் மற்றும் அரசுக்கு சொந்தமான தோட்டப் பண்ணைகளிலும், தனியார் எஸ்டேட்களிலும் தேயிலை நாற்றங்கால்களை வைத்திருக்கிறார்கள். வருடந்தோறும் கோடிக்கணக்கான தேயிலை நாற்றுகளை உற்பத்தி செய்கிறார்கள். அந்தத் தேயிலை நாற்றுகளை உற்பத்தி செய்வதற்கு மிக அதிக அளவில் பிளாஸ்டிக் பைகள் தேவைப்படுகின்றன. மேலும் மலைப் பகுதியில் வாழ்கிற மக்கள் மழையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு பாலிதீனால் செய்யப்பட்ட உறைகளை அணிகிறார்கள். கிட்டத்தட்ட 30,000 மக்கள் தொகையுள்ள உலிக்கல் என்ற அந்த இடத்தில் ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலை அமைத்தால், அதன் தயாரிப்புகள் நாற்றங்கால்களில் தயாரிக்கப்படும் தேயிலை நாற்றுகளுக்கும், மக்களுக்கும் உதவியாக இருக்கும். ஆகவே, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ் நாட்டில் சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு சலுகைகளைஅளித்துள்ள இந்த நேரத்தில், பிளாஸ்டிக் தொழிற்சாலை அமைக்க ஆர்வமுள்ளவர்கள் முன்வருவார்களானால் அரசு அவர்களை ஊக்குவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கிட்டத்தட்ட 71 கோடி ரூபாய் செலவில் 7,500 ஏக்கரில் தேயிலை பயிரிடப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே சமயத்தில், அவ்வாறு 7,500 ஏக்கரில்

பயிரிடப்படும் தேயிலைக்கு நாற்றங்கால்கள் அமைக்கப்படும் போது அதற்கு பிளாஸ்டிக் பைகள் தேவைப்படும். எனவே, அடுத்த வருடமாவது அரசின் சார்பில் அந்த இடத்தில் ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 373 குறித்து மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வினாவான 373-ஆம் வினாவுக்கு விடை அளிக்கிறபோது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. து. வரதராஜன் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பிறந்தநாள், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்தநாள் ஆகிய நாட்களில் இனிப்பு வழங்கப்படுமா என்று கேட்டார்கள். அதற்கு அண்ணா பிறந்த நாள் விழா, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பிறந்த நாள் விழா, சத்துணவு திட்டத்தைக் கொண்டுவந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். பிறந்த நாள் விழா, ஆகிய மூன்று பிறந்த நாள் விழாக்களிலும் இனிப்பு வழங்குவதைப் பற்றி அரசு நடவடிக்கையெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

375—

சாதி சான்றுகள் பெறுவதில் தாமதம்.

*5009.—திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?—

(அ) நாங்குநேரி தொகுதி, ராதாபுரம் தொகுதியில் உள்ள காட்டுநாயக்கன் சமூக சிறுவர்களுக்கு பள்ளியில் சேருவதற்குரிய சாதிசான்றுகள் பெறுவதில் மிகவும் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக சாதி சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,